## பதினைந்தாம் நிலை
## இயேசு உயிர்த்தெழுந்தார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம். ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : மாற்கு 16: 4-6

ஆனால் அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கியபொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அது பெரியதொரு கல். பிறகு அவர்கள் கல்லறைக்குள் சென்றபோது வெண்தொங்கல் ஆடை அணிந்த இளைஞர் ஒருவர் வலப்புறம் அமர்ந்திருக்கக் கண்டு திகிலுற்றார்கள். அவர் அவர்களிடம், திகிலுற வேண்டாம், சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிருடன் எழுப்பப்பட்டார், அவர் இங்கே இல்லை, இதோ, அவரை வைத்த இடம். என்றார்.

செபம்:

என்னை விசுவசித்தவன் இறப்பிலும் வாழ்வான் என்னும் உமது வார்த்தை, உயிர்ப்பின் மேல் எமக்கு நம்பிக்கையை தருகிறது தந்தையே. அன்றாட வாழ்வில் நாம் பயணித்துவரும் சிலுவைப்பாதையில், மரணத்தை வென்ற உமது வெற்றியைப்போல், எமக்கும் வெற்றிகளை இறுதியில் ஈந்தருளும். உமது திருப்பாடுகள் எமது வாழ்கைக்கு பாடமாக அமையட்டும். காட்டிக் கொடுக்கப்பட்டதும், மறுதலிக்கப்பட்டதும், முள்முடி சூடியதும், கற்தூணில் கற்றுண்டு அடிபட்டதும், சிலுவை சுமந்ததும், அதனில் உயிர் பிரிந்ததும், நித்திய வாழ்வின் உயிர்ப்புக்காகத்தான் என, எமக்காக வாழ்ந்து காட்டிய,

இனிய இயேசுவே, உமக்கு எங்கள் நன்றிகள்.





# திருச்சிலுவைப்பாதை

வாருங்கள் சுமந்திடுவோம்.



மனுமகன் எமக்காக பிறந்தார். சிலுவையை எமக்காக சுமந்தார். எமக்காக துன்புற்றார். எமக்காக மரித்தார். எமக்காக உயிர்த்தெழுந்தார். வாழ்வு தரும் இச் செய்திகளால் எங்கள் வாழ்கையானார்.

அன்று கல்வாரியில் இடம்பெற்றது சிலுவைப்பாதை. இன்று நாங்கள் சென்று கொண்டு இருப்பது குடும்பங்களின் பாதை. அதில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு சிலுவை உள்ளது. யாரும் வரார் எங்கள் சிலுவையை சுமந்திட, அதனை நாம்தான் சுமக்க வேண்டும். வாருங்கள் சுமந்திடுவோம்.

எங்கே சுமந்து போறீர்.. சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்
பொங்கும் பகைவராலே அங்கம் நடுநடுங்க எங்கே போறீர்.



## முதலாம் நிலை
## இயேசு ஜெஸ்தசமனித் தோட்டத்தில் செபிக்கிறார்



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம். ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

நற்செய்தி : லூக்கா 22: 39-44

இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் வழக்கப்படி ஒலிவ மலைக்குச் சென்றார். சீடர்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். அந்த இடத்தை அடைந்ததும் அவர் அவர்களிடம்,
சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள், என்றார். பிறகு அவர் அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் விலகிச் சென்று, முழந்தாள்படியிட்டு, இறைவனிடம் வேண்டினர். தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறினார்.

செபம்:

தந்தையே இறைவா, செபிப்பதற்கு எங்களுக்கு சொல்லிக் கொடும். இயேசு செபித்தார், இது என் விருப்பப்படியல்ல, உம் விருப்பப்படியே ஆகட்டும் எனச் செபித்தார். எமது செபங்களில் எமது விருப்பங்களே நிறைந்துள்ளன. கடவுளின் விருப்பங்கள் காணாமல் போகின்றன. இயேசுவின் வார்த்தைகளுடன் இசைந்து வாழ்ந்து, அவரின் விருப்பங்களை நிறைவேற்றாமல், எமது விருப்பங்களை நிறைவேற்றுமாறு எவ்வாறு எம்மால் அவரிடம் மன்றாட முடியும். ஒரு மனிதனாக செபிப்போம். ஒரே குடும்பமாக செபிப்போம். ஒரே சமுகமாக செபிப்போம்.

தந்தையே இறைவா, உமது கட்டளைகளுக்கு எதிராக, நாம் இளைத்த பாவங்களுக்காக எம்மை மன்னித்தருளும். உமது சித்தத்தின் படியே நீர் எமக்குத் தந்த சிலுவையை, நாம் உம் பின்னே சுமந்து வந்திடுவோம். அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.

பாடல்:

மனித பாவத்தாலே மரணத்தீர்வைப் பெற்று
தூய செம்மறி போலே துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்

## பதிநான்காம் நிலை
## இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : மாற்கு 15: 43-46
அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் துணிவுடன் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். அவர் மதிப்புக்குரிய தலைமைச் சங்க உறுப்பினர். அவரும் இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தவர். ஏற்கெனவே இயேசு இறந்துவிட்டதைக் குறித்துப் பிலாத்து வியப்படைந்து, நூற்றுவர் தலைவரை அழைத்து, அவன் இதற்குள் இறந்து விட்டானா? என்று கேட்டான். நூற்றுவர் தலைவரிடமிருந்து கேட்டு அறிந்ததும், உடலை அவன் யோசேப்பிடம் அளித்தான். யோசேப்பு மெல்லிய துணி ஒன்றை வாங்கி வந்து, இயேசுவின் உடலை இறக்கித் துணியால் சுற்றிப் பாறையில் வெட்டப்பட்டிருந்த கல்லறையில் கொண்டு வைத்தார், அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார்.

செபம்:

தாவீது வம்சவழி வந்த இயேசு பிறந்த மாட்டுத்தொழுவம், அவர்களுக்கு சொந்தமானதல்ல. தங்க இடமின்றி, முகம் தெரியாத ஒருவருக்குச் சொந்தமான கொட்டிலில் பிறந்தார். நசரேத்தூர் இயேசு இறந்தபோதும் அவர் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை, அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசப்புக்கு சொந்தமானது. இயேசுவுக்கு சொந்தமானதல்ல. படைப்பின் தந்தையே, உமது ஒரே மகனுக்கு இவ் உலகில் எதுவும் சொந்தமில்லை. பாவிகளாகிய எங்களை தவிர. நாங்கள் எதனையும் கொண்டுவரவில்லை, இறுதியில் எடுத்துச் செல்வதற்கு. இடைப்பட்ட வாழ்க்கையில் எம்மை உம் குழந்தைகள் போல் கைபற்றி கூட்டிச் செல்லும்.

பாடல்:

கர்த்தனே நின் உடலைக் கல்லறைக்குள்ளடக்க
உத்தானம் ஜீவனுமாய் உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.

## பதின்முன்றாம் நிலை
## இயேசு தன் சிலுவையில் மரிக்கிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : யோவான் 19: 28-30

இதன்பின், அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, தாகமாய் இருக்கிறது என்றார். மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இவ்வாறு சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையப்புளித்த திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து ஈசோப்புத் தண்டில் பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள்.அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு, எல்லாம் நிறைவேறிற்று என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்.

செபம்:

என் இறைவா, என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர். தந்தையே என் உயிரை உம் கைகளில் ஒப்படைக்கிறேன். எல்லாம் நிறைவேறிற்று. இயேசுவின் இறுதி வார்த்தைகள் இவை. தந்தையின் சித்தத்தை மகன் இவ்வாறு நிறைவேற்றினார். இறைவா, உமது சித்தத்தை நாங்கள் நிறைவேற்றவும், எங்கள் குடும்பங்கள் நிமித்தம் எமக்குள்ள சித்தங்களை நாங்கள் நிறைவேற்றிடவும், இயேசுபோல் மனவுறுதியை தாரும்.

பாடல்:

உமது மடிமீதில் மரித்த மகன் தாங்கி
ஏழு சோக வாட்களால் ஊடுருவி வருந்தித் தாயே நின்றீர்

## இரண்டாம் நிலை
## யுதாஸ் முத்தமிட இயேசு கைது செய்யப்படுகிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்இ

நற்செய்தி : லூக்கா 22: 47-48

இயேசு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, இதோ! மக்கள் கூட்டமாய் வந்தனர். பன்னிருவருள் ஒருவனான யூதாசு என்பவன் அவர்களுக்கு முன் வந்து அவரை முத்தமிட நெருங்கினான். இயேசு அவனிடம், ''யூதாசே, முத்தமிட்டா மானிட மகனைக் காட்டிக் கொடுக்கப் போகிறாய்? '' என்றார்..

செபம்:

தந்தையே இறைவா.. எங்கள் கடைசி நிமிடப் பொழுதுகளிலும், காட்டிக் கொடுப்பின் கருவியாக நாங்கள் மாறாத வண்ணம், சாத்தான்களிடம் இருந்து எங்களை காத்தருளும். ஒன்றாக உணவருந்திய நண்பனை, ஒரே பாத்திரத்தில் பானம் பருகிய சகோதரனை, போகும் வழியல்லாம் ஒளியாய் இருந்த தலைவனை, முப்பது வெள்ளிக் காசுக்காக யூதாஸ் முத்தமிட்டு காட்டிக் கொடுத்தான். இது முடிவுற்ற நிகழ்வு அல்ல. இன்றும் நீழும் நிகழ்சிநிரலாகும். நான் என்கிற இருப்பு இல்லாமல் போகும் போது துரோகம் துணைக்கு வருகின்றது. விசுவசித்தவர்கள் விலக்கப்படுகிறார்கள்.

தந்தையே இறைவா.. துரோகம் இளைப்பதை எம்மிடம் இருந்து தூர விலக்கி வையும். விசுவாசத்தின் வேர்களில் எங்கள் குடும்பங்களையும், சமூகத்தையும் வாழ வையும்.

பாடல்:

பாரச்சிலுவையை நீர் பாசத்துடன் அணைத்து
பாவத்தின் சுமை தாங்கி ஆர்வத்துடன் நடந்து எங்கே போறீர்.

## மூன்றாம் நிலை
## இயேசு தலைமைக்குருக்களால் தீர்ப்புக்குளாகிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

நற்செய்தி: மத்தேயு 26:63-64

பொழுது விடிந்ததும் மக்களின் மூப்பர்களும் தலைமைக்குருக்களும் மறைநூல் அறிஞர்களும் கூடிவந்தார்கள்: இயேசுவை இழுத்துச் சென்று தங்கள் மூப்பர் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள். அவர்கள்,நீ மெசியா தானா? எங்களிடம் சொல் என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், நான் உங்களிடம் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள், நான் உங்களிடம் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டீர்கள். இதுமுதல் மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார் என்றார். அதற்கு அவர்கள் அனைவரும், ''அப்படியானால் நீ இறைமகனா?'' என்று கேட்டனர். அவரோ, ''நான் இறைமகன் என நீங்களே சொல்லுகிறீர்கள்'' என்று அவர்களுக்குச் சொன்னார்.

செபம்:

தந்தையே இறைவா, யாருக்கும் தீர்வையிடும் அதிகாரம் எமக்கு வழுங்கப்படவில்லை என்பதை, எமக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தியருளும். எம் பாவச் சேறு கழுவ எம்மிடமே நீரில்லை, நாம் எப்படி மற்றவர்களை சுத்தப்படுத்துவது. நிபந்தனையற்ற அன்பால் எங்களை என்றும் நேசிப்பவரே, உமது ஆறுதலாலும், அரவணைப்பாலும் நாங்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளச் செய்வீராக. உமது மகனும் எங்கள் மீட்பருமான இயேசுவின் விம்பத்தை எம்முள் பதித்தருளும். இதன் மூலம் பிறரைத் தீர்ப்பிடாமல் அவர்களையும் எம்முள் ஒருவனாக ஏற்றுக் கொள்ளும் வரம் அருளும்.

பாடல்:

கல்வாரி மலை நாடி தள்ளாடித் தரை வீழுந்து
எல்லோரின் பாவங்களைத் தனிமையாய்ச் சுமந்து எங்கே போறீர்.

## பனிரெண்டாம் நிலை
## இயேசு தன் தாயிடம் எம்மிடம் தருகிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

நற்செய்தி : யோவான் 19: 26,27

இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், அம்மா, இவரே உம் மகன் என்றார். பின்னர் தம் சீடரிடம், இவரே உம் தாய் என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்.

செபம்:

அம்மா, அனைத்துயிர்களும் உச்சரிக்கும் முதல் வார்த்தை. அவ் உறவு அனைத்து உறவுகளிலும் மிகவும் வலிமையானது. அதனால்தான் இயேசுவும், உயிர் பிரியும் இறுதி நாளிகையில், தன் தாயை தனியே விடாது, எங்கள் அனைவருக்கும் தாயாக்கி உயிர் நீத்தார். இனிய இயேசுவே, உமது அன்னையின் அன்பும், அருளும், பரிந்துரைகளும், எங்கள் வாழ்வில் தொடர்ந்து வர ஆசீர் தாரும்.

பாடல்:

சிலுவைப் பீடமேறி மும்மணி நேரம் தொங்கி
நேய பிதாவை வேண்டி ஆருயிர் ஒப்படைத்துப் பலியானீர்.

## பதினொன்றாம் நிலை
## இயேசு கள்வனுக்கு விண்ணக வாழ்வை அளிக்கிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : லூக்கா 23:39-43

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், "நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, "கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!" என்று பதிலுரைத்தான். பின்பு அவன், இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும் என்றான். அதற்கு இயேசு அவனிடம், நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்' என்றார்.

செபம்:

அன்பு இயேசுவே!
மனந்திருந்தி நற்செய்தியை ஏற்றுக் கொண்டால் புதுவாழ்வு பெறுவீர் என்பதை எங்களுக்கு இந்த நல்ல கள்வன் முலம் உணர்த்தினீரே. இவ் உண்மையை உணர்ந்தவர்களாய், மனம் திருந்தி, உமது சகோதரனாக, உமது நண்பனாக வாழ, பரிசுத்த ஆவி எங்களை வழிநடத்த, உம்மை மன்றாடுகிறோம்.
அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.

பாடல்:

நீட்டிய கைகால்களில் நீண்ட இரும்பாணிகள்
நிஷ்டூரமாய் அறைய நேசத்தால் வெந்து பலியானீர்.

## நான்காம் நிலை
## இயேசுவை பேதுரு மறுதலித்தார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : லூக்கா 22: 54-60

வீட்டு உள்முற்றத்தின் நடுவில் நெருப்பு மூட்டி, அதைச் சுற்றி அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பேதுருவும் அவர்களோடு இருந்தார். அப்போது பணிப்பெண் ஒருவர் நெருப்பின் அருகில் அவர் அமர்ந்திருப்பதைக் கண்டு, அவரை உற்றுப்பார்த்து, இவனும் அவனோடு இருந்தவன் என்றார். அவரோ, அம்மா, அவரை எனக்குத் தெரியாது என்று மறுதலித்தார். சிறிது நேரத்திற்குப்பின் அவரைக் கண்ட வேறு ஒருவர், நீயும் அவர்களைச் சேர்ந்தவன்தான் என்றார். பேதுரு இல்லையப்பா என்றார். ஏறக்குறைய ஒரு மணிநேரத்திற்குப்பின்பு மற்றொருவர், உண்மையாகவே இவனும் அவனோடு இருந்தான், இவனும் கலிலேயன்தான் என்று வலியுறுத்திக் கூறினார். பேதுருவோ, நீர் குறிப்பிடுபவரை எனக்குத் தெரியாது என்றார். உடனேயே, அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோதே, சேவல் கூவிற்று ஆண்டவர் திரும்பி, பேதுருவைக் கூர்ந்து நோக்கினார், இன்று சேவல் கூவு முன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய் என்று ஆண்டவர் தமக்குக் கூறியதைப் பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே சென்று மனம் நொந்து அழுதார்.

செபம்:

இறைவா, வாழ்கையின் உயரங்களைத் தொட்டு உயரும் போது, நாங்கள் மிதித்த படிக்கட்டுக்களை மறுதலிக்கா மனம் தாரும். இயேசுவே உமக்காக எனது உயிரையும் தருவேன் எனக் கூறிய இராயப்பரும், தனது உயிருக்கு பயந்து, ஓர் நாட்பொழுதில் மூன்று முறை உம்மை மறுதலித்தார். நாங்களும் அவ்வண்ணமே, உறவுகளை, ஊரை, தேசத்தை, மொழியை எம் நலன் கெடும்போது, எத்தனை தரம் மறுதலித்தோம். மன்னித்துவிடு தேவா. மறுதலித்தவர் மேலே, மன்னித்து உமது திருச்சபையை கட்டினீர். அதுபோல் எமை மன்னித்து, எங்கள் குடும்பங்களை கட்டியெழுப்பும்.

பாடல்:

மாமரி கன்னி அன்னை மகனின் கோலம் கண்டு
மாதுயருடன் வாடி மனம் நொந்து வருந்த எங்கே போறீர்

ஐந்தாம் நிலை
இயேசுவுக்கு பிலாத்து மரணதண்டனை விதிக்கிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : மத்தேயு 27: 11-14

இயேசு ஆளுநன் பிலாத்து முன்னிலையில் நின்று கொண்டிருந்தார். ஆளுநன் அவரை நோக்கி, நீ யூதரின் அரசனா? என்று கேட்டான். அதற்கு இயேசு, அவ்வாறு நீர் சொல்கிறீர் என்று கூறினார். மேலும் தலைமைக் குருக்களும் மூப்பர்களும் அவர்மீதும் குற்றம் சுமத்தியபோது அவர் மறுமொழி எதுவும் கூறவில்லை. பின்பு பிலாத்து அவரிடம், உனக்கு எதிராக எத்தனையோ சான்றுகள் கூறுகிறார்களே, உனக்குக் கேட்கவில்லையா? என்றான். அவரோ ஒரு சொல்கூட அவனுக்கு மறுமொழியாகக் கூறவில்லை. ஆகவே ஆளுநன் மிகவும் வியப்புற்றான்.


செபம்:

இறைவா, உண்மை என்று தெரிந்தும், அதற்கெதிராய் தீர்ப்பெழுதிய, இரத்தம் படிந்த கரங்களை கழுவுவதற்காய், நீர் திருமுழுக்கு அடைந்த ஜோர்தான் நதியை இங்கே ஓடவிடும். பரபாஸை விடுதலை செய். இயேசுவை கொலை செய். எனக் கூறும் உலகினுள் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். சத்தியம் சாவினைத் தழுவும் போதும், சூழ்நிலைக் கைதியாகி பிலாத்துவைப்போல் இருக்கிறோம். உண்மையை உரத்துச் சொல்லாவிட்டாலும், அதற்கு சாட்சி சொல்லும் பண்பை, எமக்கு தந்திடும் தந்தையே.

பாடல்:

உதிரம் ஆறாய் சிந்தி உள்ள வீரமிழந்து
சீரோன் சீமோன் துணையை ஏற்று வழி நடந்து எங்கே போறீர்

பத்தாம் நிலை
இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : யோவான் 19: 17-19

இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு மண்டை ஓட்டு இடம் என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் கொல்கொதா என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து குற்ற அறிக்கை ஒன்று எழுதி அதைச் சிலுவையின் மீது வைத்தான். அதில் ''நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்'' என்று எழுதியிருந்தது.

செபம்:

எங்கள் விடுதலை நாயகனே! அன்பு இயேசுவே! அவமானச் சின்னமாகிய சிலுவையில் எங்களுக்காக மரிக்க உம்மை கையளித்தீரே! அந்த அவமானச் சின்னம் சாவை வென்று எங்கள் வாழ்வின் வெற்றியின் சின்னமாக மாறியது உம் அன்பால் அன்றோ! எங்களுக்கு ஏற்படும் அவமானங்கள் எல்லாம் வெற்றியின் படிக்கட்டுகளாக அமைய அருள்புரிவீராக.
அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.

பாடல்:

நீட்டாடை கழற்றவே கோடிக் காயங்களாலே
இரத்தம் ஆறாய் பெருக வேதனையால் வருந்தி தூயா நின்றீர்.

ஒன்பதாம் நிலை

இயேசு வழியில் எருசேலம் மகளிர்களை சந்திக்கிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : லூக்கா 23: 27-29

பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம், மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். ஏனெனில் இதோ, ஒரு காலம் வரும். அப்போது மலடிகள் பேறுபெற்றோர் என்றும், பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறு பெற்றோர் என்றும் சொல்வார்கள்.

செபம்:

தந்தையே இறைவா!
மாசற்ற இயேசுவுக்கு நேர்ந்த கொடுமைகளைக் கண்ட எருசேலம் பெண்கள் அவரை எதிர்கொண்டபோது "எனக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று ஆறுதல் தந்தீரே! எங்களாலும் எங்கள் பிள்ளைகளாலும் நேர்ந்த நிந்தை அவமானத்தால் உம்மை காயப்படுத்தியதற்காக வருந்துகிறோம். எங்கள் குடும்பம் உமது ஆலயமாக மாற அருள்புரிவீராக.

பாடல்:

தூர வழிச் சிலுவை தாங்கப் பெலமுமின்றி
மூன்றாம் முறை தரையில் முகம் படிந்தெழுந்தும் எங்கே போறீர்.

ஆறாம் நிலை

இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு முள்முடி சூட்டப்பட்டார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

நற்செய்தி : யோவான் 19: 1-3

பின்னர் பிலாத்து இயேசுவைச் சாட்டையால் அடிக்கச் செய்தான். வீரர்கள் ஒரு முள்முடி பின்னி அவர் தலையின்மேல் வைத்து, செந்நிற மேலுடையை அவருக்கு அணிவித்தார்கள். அவரிடம் வந்து, ''யூதரின் அரசே வாழ்க!'' என்று சொல்லி அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள். பிலாத்து மீண்டும் வெளியே வந்து அவர்களிடம், அவனை நான் உங்கள்முன் வெளியே கூட்டிவருகிறேன், பாருங்கள். அவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள் என்றான்.

செபம்:

நீதியின் நிமித்தம் துன்புறுபவர்கள் பேறுபெற்றவர்கள் எனக் கூறிய தந்தையே, பல சகாப்தங்களாக நீதியினை பெறுவதற்காய், இன்னல்லுற்றுக் கொண்டிருக்கும் எம் மக்கள் மேல் இரக்கமாய் இரும். முள்முடி அவர்களின் இருதயத்தில் சூட்டப்பட்டுள்ளது. சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டு, அவமானப் படுத்தப்படுகிறார்கள். தந்தையே! எப்படி உமது திருமகன் நிந்தைகளையும் கொடுமைகளையும் சகித்துக் கொண்டாரோ, அதுபோல் நாங்களும், எம் மக்களும் சகிப்புத்தன்மையுடன் வாழ வரம் தாரும். பொறுமையின், இயலாமையின், எல்லையிலுள்ள எம் மக்களுக்கு, உயிர்ப்போம் என்னும் நம்பிக்கையை அருளும்.

பாடல்:

கர்த்தனே உம் வதனம் இரத்தக்கறையாய் மங்கி உத்தமி வெரோணிக்கா
வெண்துகிலால் துடைத்தும் எங்கே போறீர்.

## ஏழாம் நிலை
## இயேசு சிலுவையைச் சுமக்கிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : யோவான் 19: 16-17

அப்போது பிலாத்து அவரைச் சிலுவையில் அறையுமாறு அவர்களிடம் ஒப்புவித்தான். அவர்கள் இயேசுவைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்கள். இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு மண்டை ஓட்டு இடம் என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் கொல்கொதா என்பது பெயர்.

செபம்:

சுமை சுமப்பவர்களே என்னிடம் வாருங்கள் என அழைத்த தந்தையே, உமது மகன் மனுக்குல மீட்ப்புக்காக சிலுவை சுமந்தார். நாம் எங்கள் குடும்ப மீட்ப்புக்காக சுமக்கும் சிலுவையை, இறுதிவரை சுமந்திட வல்லமை தாரும். சிலுவையை சுமை என எண்ணாது, பிறப்பின் கடமை என எமக்கு உணர்த்தியருளும். தண்ணீர் ஊற்றாமலே வளர்ந்த சிலுவைமரம், எங்கள் வீட்டில் இருப்பது, உமது இரக்கத்தால் எமை இரட்சித்தருளவே இறைவா. அன்பு இயேசுவே! எங்கள் குடும்பம் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.

பாடல்:

பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த பாரச்சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்.

## எட்டாம் நிலை
## இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்.



திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்

நற்செய்தி : லூக்கா 23: 26

அவர்கள் இயேசுவை இழுத்துச் சென்றுகொண்டிருந்தபோது சிரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப்பின் அதைச் சுமந்து கொண்டுபோகச் செய்தார்கள்.

செபம்:
தோளில் சிலுவை சுமந்தபோது, தோள் கொடுத்த தோழன் சீமோன்.
தந்தையே இறைவா!
சிரேன் ஊரைச் சோந்த சீமோன் இயேசுவுடன் சிலுவை சுமந்து சென்றதைப் போல் எங்கள் வாழ்வில் வரும் துன்ப துயரங்களை ஏற்றுக்கொள்ள மனத்திடமும், ஆழ்ந்த விசுவாசத்தையும், உமது ஆறுதலையும் எங்களுக்கு தாரும். சீமோனைப் போல் நாங்களும் வாழ்வில் துன்பப்படுவோருக்கு உதவும் நல்லெண்ணத்தைத் தாரும். எப்போதும் எங்களுடன் நீர் இருப்பதை உணர்ந்து வாழ அருள்புரிவீராக. அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.

பாடல்:
புண்ணிய பெண்மணிகள் புலம்பி அழும்வேளை
தேற்றுதல் கூறி நீரும் நேசக் கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்.